ஊராட்சி படிவம் எண் : 6

No. B

2099

வல்லம் ஊராட்சி

பலவகை வரவு ரசீது

அசல்

புத்தக எண் ..... பற்றுச் சீட்டு எண்.

வல்லம் ஊராட்சி நாள் : 21/2/2024

திரு. பி. [illegible] (த/பெ) [illegible] கிராமம் [illegible] என்பவரிடமிருந்து

ரூபாய் [illegible] (ரூபாய் [illegible] மட்டும்)

[illegible] மனை வரி [illegible] ஆகிய கட்டணத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டது.

பணம் செலுத்துபவரின் கையொப்பம்.

ஊராட்சி செயலர்

ஊராட்சி தலைவர்/தனி அலுவலர்.

வல்லம் ஊராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்

குறிப்பு: 1. இந்த பற்றுச் சீட்டு தனி அலுவலர் / ஊராட்சி செயலர் / Facsimiles - யுடன் மற்றும் வரி வசூலிப்பாளர் கையொப்பமும் இருந்தால்தான் செல்லத்தக்கதாகும்.

2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடது கை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்.

ரெட்கோ, செங்கை.

Scanned with OKEN Scanner

வல்லம் ஊராட்சி

வல்லம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
ஆணை பிறப்பிப்பவர் -திரு.V.காந்தி அவர்கள்

ந.க.எண். 34(1)/2023/(வ.ஊ.ம) நாள் -22.02.2024

பொருள் குடியிருப்பு மனைப்பிரிவு - செங்கல்பட்டு மாவட்டம் - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் -வல்லம் ஊராட்சி - வல்லம் கிராமம் சர்வே எண்கள் - 166/2; 167/1, 2Pt, 3; 170/2, 3, 4A, 4C; 171/5B, 6; 172; 173/1A-ல் மொத்த மனைகள் - 1 முதல் 69 மனையின் பரப்பு - 3.495 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் - தொடர்பாக

பார்வை

1) மனுதாரர் திரு.G.மோகன் மற்றும் திரு. G.அசோக்குமார், அவர்கள் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்-25.06.2021
2) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் கடிதம் ந.க.எண் 2176/2021/செ.மா3, (சாலை அமைப்பு வரைபடம் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு நாள்.30.07.2021-ல் முகவரியிட்டது)
3) மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு அவர்களின் கடிதம் ந.க.எண்.2725/2020/ ஆ2, நாள்-15.03.2021
4) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 19799/2020/போ நாள்- 24.12.2020
5) மனுதாரர் திரு.G.மோகன் மற்றும் திரு. G.அசோக்குமார், அவர்கள் கடிதம் நாள்05.08.2021 (தானப்பத்திரம் எண் 2033/2021 நாள் 04.08.2021-ல் சமர்பிக்கப்பட்டது)
6) அரசாணை (நிலை) எண் 138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04.06.2004
7) அரசாணை (நிலை) எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017
8) அரசாணை (நிலை)எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020
9) அரசாணை (நிலை) எண் 141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD1(4)) துறை நாள் 23.09.2020
10) அரசாணை (நிலை) எண் 181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(1) , நாள் 09.12.2020
11) அரசு கடிதம் எண் 19113/நவ4(3) /2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்-30.08.2017
12) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13686/2021/எல்ஏ1, நாள்08.09.2017
13) இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண் நாள் 12.08.2021 (நன்னிலைவரி, Display Board கட்டணம், Flag Day Fund ஆகிய கட்டணங்கள் செலுத்தக் கோரியது)
14) மனுதாரர் திரு.G.மோகன் மற்றும் திரு. G.அசோக்குமார், அவர்களின் கடிதம் நாள் 17.08.2021 நன்னிலைவரி, Display Board கட்டணம், Flag Day Fund ஆகிய கட்டணங்கள் செலுத்தப்பட்டது)
15) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண் 4367/2019 ந.ஊ2, நாள்14.10.2019
16) நகர் ஊரமைப்பு ஆணையர் சுற்றறிக்கை கடிதம் எண் 9860/10/முதி1 நாள் 20.09.2016-ன் படி Online Application No : 202100201013263 Dt:22.06.2021

****

Scanned with OKEN Scanner

உத்தரவு -

பார்வை 1-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம், அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் -2176/ 2021/ செ.மா3 நாள் - 23.08.2021 -ன் படி செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், வல்லம் ஊராட்சி - வல்லம் கிராமம் சர்வே எண்கள் - 166/2; 167/1, 2Pt, 3; 170/2, 3, 4A, 4C; 171/5B, 6; 172; 173/1A-ல் மொத்த மனைகள் - 1 முதல் 69 மனையின் பரப்பு - 3.495 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடிமிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ. / ந.ஊ.து.இ.(செ.ம.) எண்-63/2021** என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவினை தலைவர் ஆய்வு செய்து 16.02.2024 அன்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார் அதனை ஏற்று செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம வல்லம் ஊராட்சி - வல்லம் கிராமம் சர்வே எண்கள் - 166/2; 167/1, 2Pt, 3; 170/2, 3, 4A, 4C; 171/5B, 6; 172; 173/1A-ல் மொத்த மனைகள் - 1 முதல் 69 மனையின் பரப்பு - 3.495 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அனுமதி கட்டணம் மொத்தம் ரூ.2,35,200/- (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து இருநூறு மட்டும்) வல்லம் ஊராட்சி மன்றத்தில் செலுத்தியமைக்கான பலவகை இரசீஎண் - 2099, நாள் - 21.02.2024- ல் செலுத்தப்பட்டத்தின் அடிப்படையில் குடிமிருப்பு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்க மவ / தலைவர் எண் - 01/ 2023-24 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

பார்வையில் கண்டுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட கட்டிட மற்றும் மனைப்பிரிவு விதிகளுக்கு உட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் , ந.க.எண் -2176/ 2021/ செ.மா3 நாள் - 23.08.2021-ன் படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரர்கள் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலதத்திற்கும் அமைகக்பட வேண்டும். அதோடு தகுந்த சிறு பாலங்கள், சாக்கடை, வடிகால், துப்புரவு தெரு விளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்துதர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
2. தெரு முனையில் அமையும் மனைகளில் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.
3. அங்கீரிக்கப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட மனைகள் தவிர குடிமிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாது, கடை, பண்டகசாலை மற்றும் குடிமிருப்பு அல்லாத குடிமிருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது.
5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்புக்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து எந்த கட்டிடமோ சுவரோ மேற்படாது சுற்றுச்சுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டக்கூடாது.
6. மனையின் பின்புறம் எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறு மல அறை, எருகுழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவை போன்று குடிமிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமாக பின் எல்லையில் நிலத்தின் மூன்றின் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
7. மனையின் பரப்பில் 50 சதவீதத்திற்கு மேற் கட்டிடம் கட்டக்கூடாது.
8. நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் , குத்தகை பத்திரம் , பட்டா, தானப்பத்திரம் பொது

Scanned with OKEN Scanner

அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

9. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
10. கடக்கால் போட தேவையான அளவிற்கு அதிகமான தரையை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள் கழனி ஏற்படுத்தக் கூடாது.
11. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுதிட்டங்கள் விற்பனைப் பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.
12. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.
13. தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 6"அடி X 4" அடி என்ற அளவுக்கு குறையாமல் காங்கீரிட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வல்லம் ஊராட்சி தீர்மானம் எண் : 80 , நாள் 21.02.2024

இணைப்பு - மனைப்பிரிவு வரைபடம்.

பெறுநர்

திரு.G.மோகன் மற்றும் திரு. G.அசோக்குமார்,
எண்.73, இராஜாஜி தெரு,
செங்கல்பட்டு.

22/2/24

தலைவர்
வல்லம் ஊராட்சி
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்

காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் வல்லம் ஊராட்சி செங்கல்பட்டு மாவட்டம்

Scanned with OKEN Scanner